# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் மே மாத அவசரக்கூட்டம் 24.05.2022 ஆம் தேதி செவ்வாய்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது. எனவே மேற்படி கூட்டத்தில் நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

## பொருள் எண்.1

இந்நகராட்சியில் சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை எண்.52) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள் **01.04.2022** மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.**40032/2012/**ஆர்**1** நாள் **01.04.2022** ஆகியவற்றின்படியும், சொத்துவரி சீராய்வு தொடர்பாக குளச்சல் நகராட்சி மன்றத் தீர்மானம் எண்.**20** நாள் **11.04.2022**–ன் படி, மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது. **15**–ஆவது மத்திய நிதி ஆணையம், **2022–2023**–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate (i.e.)Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் **2.0** மற்றும் அம்ரூட் **2.0** ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை (நிலை) எண்.**73** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**19.07.2018** மற்றும் அரசாணை(நிலை) எண்.**76** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**26.07.2018** ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.**150** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.**19.11.2019**–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், **15**வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள்(**Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(**Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

காலிமனை வரி சீராய்வு:

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் குளச்சல் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (**Current Liabilities**) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 1.40 |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் (நூலக வரி மற்றும் நில அளவை கட்டணம்) | 0.52 |
| 3 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 0.14 |
| | **மொத்தம்** | **2.06** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், குளச்சல்

நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி / காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

சொத்துவரி சீராய்வு தொடர்பாக முடிவு செய்யப்பட்ட இந்நகராட்சி மன்ற தீர்மானத்தின் மீது பொதுமக்கள் ஆட்சேபனை மற்றும் கருத்துக்களை 30 தினங்களுக்குள் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க விளம்பர அறிவிப்பானது தினத்தந்தி, தினக்குரல் நாளிதழில் 14.04.2022 அன்றும் (செய்தி வெளியீடு ஆணை எண்.156/2022) மற்றும் Indian Express ஆங்கில நாளிதழில் 14.04.2022 அன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் சொத்துவரி / காலிமனை வரி பொது சீராய்வு 2022 தொடர்பாக பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 2 ஆட்சேபனைகள் இறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட விவரப்படியாக 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1249/2018/அ1

**தீர்மானம் எண்**.21 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் மே மாத சாதாரணக்கூட்டம் 31.05.2022 ஆம் தேதி செவ்வாய்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ளது. எனவே மேற்படி கூட்டத்தில் நகர்மன்றத் துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

## பொருள் எண்.1

நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சி ஒற்றைக்கண் பாலம் இறக்கத்தில் சிங்கன்காவு குறுக்குசாலை பகுதியில் அமைந்துள்ள 2 மின்கம்பங்களில் தெருவிளக்கு வசதி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குளச்சல் - திங்கள் நகர் பிரதான சாலையில் சுடலைமாடன் கோவிலை ஒட்டி செல்லும் குறுக்கு தெருவில் அமைந்துள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு வசதி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.22 பொருள் எண்.1-ல் குறிப்பிடப்பட்டுள்ள முதல் தீர்மானம் அரசு உத்தரவுக்குப்பின் செயல்படுத்திட உள்ளதால் முதல் தீர்மானம் 1 நீக்கப்பட்டதாக தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண்.2

குளச்சல் நகராட்சியில் தற்போது 2 எண்ணம் ஈப்புகள் பயன்பாட்டில் உள்ளது. அவற்றில் TN 74 V 3530 ஈப்பு வாகனம் 2005 ஆம் வருடத்திலும், TN 75 K 6526 ஈப்பு வாகனம் 2012 ஆம் வருடத்திலும் வாங்கப்பட்டது. மேற்படி வாகனங்களில் TN 74 V 3530 வாகனம் வாங்கப்பட்டு, 16 ஆண்டுகள் முடிவடைந்துள்ள நிலையில், 15 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்ட அரசு வாகனங்களை கழிவு (Condemn) செய்வதற்கு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, இந்நகராட்சி பொறியியல் பிரிவு திட்டப்பணிகள், குடிநீர், தெருவிளக்கு பணிகளை மேற்பார்வையிடுவதற்கு புதிதாக ஒரு எண்ணம் ஈப்பு வாகனம் வாங்குவதற்கு அனுமதி வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.370/2022/இ1

**தீர்மானம் எண்**.23 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.3

இந்நகராட்சி பொறியியல் பிரிவில், குடிநீர் வினியோகப் பணிகளை மேற்கொள்வதற்கு 5 எண்ணம் தினக்கூலி பணியாளரகள் ஒப்பந்த அடிப்படையில் ஓர் ஆண்டிற்கு (2022-2023 ஆம் ஆண்டு) பணிக்கு அமர்த்துதல் பணியினை ரூ.9,80,000/- மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, கடந்த 25.03.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு.A.பிரான்சீஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.33% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.T.இரவீந்திரன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று, பணி உத்தரவு வழங்கியுள்ளதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : குடிநீர் பணிகளின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு, மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.178-1/2022/இ1

**தீர்மானம் எண்.24** ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.4

இந்நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணியில் 2021-22 ஆம் ஆண்டு ஈடுபடுத்தப்பட்ட ஜெயம் மகளிர் சுய உதவிக்குழுவின் பணிக்காலம் 31.03.2022 உடன் முடிவடைந்துள்ளது. தற்பொழுது மழை தொடர்ந்து பெய்து வருவதினால் DBC பணிகள் மேற்கொள்வது அவசியமாகிறது. மேலும் மேற்கண்ட மகளிர் குழுவானது கடந்தாண்டு வழங்கப்பட்ட தினசரி ஊதிய அளவில் பணிபுரியவும், 2022-23 ஆம் ஆண்டு பணிக்காலத்தினை புதுப்பிக்கவும் கோரியுள்ளதினை ஏற்று அவசர அவசியம் கருதி இக்குழுவிற்கு 2022-23 ஆம் ஆண்டிற்கு பணிக்காலம் நீட்டித்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது. இக்குழுவில் 20 DBC பணியாளர்கள் பணிக்கு அமர்த்துவதற்கு 2022-23 ஆம் ஆண்டிற்கு தினக்கூலி தொகை கீழ்கண்ட விபரப்படி நிர்ணயம் செய்யப்படுகிறது.

1.DBC பணியாளர்களின் எண்ணிக்கை - 20

2. தினசரி ஊதியம் ஒரு நாளைக்கு - ரூ.250

3. 2022-23 ஆம் ஆண்டிற்கு 20 x 365 x 250 = ரூ.18,25,000/.

4. EPF நகராட்சி பங்கு தொகை ரூ.2,19,000/-

(18.25000 x 12%) கூடுதல் ரூ.20,44000/-

மேற்படி மதிப்பீட்டுத் தொகை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடிதம் ந.க.எண்.2571/2017/J1 நாள் 23.04.2018-ன் படியும், மாவட்ட ஆட்சியர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையிலும் மேற்கண்ட DBC பணியாளர்களுக்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.25** ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.5

இந்நகராட்சியில், தற்போது பராமரிக்கப்பட்டு வரும் 1601 எண்ணம் தெருவிளக்குகளுக்கு, 2022-23 ஆம் ஆண்டிற்கு தேவையான மின் உபகரணங்கள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பொருட்கள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 20 w 4 Feet LED Tube light | 2676 Nos. |
| 2 | 36 w CFL Tube light | 500 Nos. |
| 3 | 36 W Electronic choke | 500 Nos. |
| 4 | 4 Feet Tube light fittings | 200 Nos. |
| 5 | 4 Pin fittings | 100 Nos. |
| 6 | Insulation Tap | 50 Nos. |
| 7 | 1/8 Copper wire | 20 coils |
| 8 | 3/20 Copper Wire | 10 coils |
| 9 | 4 pin holder | 200 Nos. |
| 10 | 250 W sodium vapour bulb | 50 Nos. |
| 11 | 250w Sodium vapour Choke | 30 Nos. |
| 12 | 33 MFD condensor | 50 Nos. |
| 13 | Ignitor | 50 Nos. |
| 14 | Sodium vapour holder | 30 Nos. |
| 15 | 16A Fuse carrier | 50 Nos. |
| 16 | 32A Fuse carrier | 50 Nos. |

மேற்காணும் மின் உபகரணங்களுக்கு மிதிப்பீட்டுத் தொகை ரூ.9,90,000/-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.544/2022/இ2

**தீர்மானம் எண்**.26 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.6

இந்நகராட்சியில், உள்ளாட்சி தேர்தல் 2022 அவசரப் பணியின் காரணமாக அலுவலக வளாக கட்டிடங்களில் ஒரு பகுதிக்கு (நகர்மன்றக் கூடம், நகர்மன்றத் தலைவர் அறை மற்றும் அதனோடு சேர்ந்த பொறியியல் பிரிவு, கணிணி அறை) வர்ணம் பூசப்பட்டது. ஏனைய பொதுப்பிரிவு, சுகாதாரப்பிரிவு, நகரமைப்பு பிரிவு கட்டிடங்கள் வர்ணம் பூசப்படாமல் உள்ளது. எனவே மேற்காணும் பிரிவு கட்டிடங்களில் வர்ணம் பூசும் பணியினை ரூ.2,30,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.548/2022/இ1

**தீர்மானம் எண்**.27 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.7

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்வதற்காக 23 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் பயன்பாட்டில் உள்ளது. மேற்படி ஆழ்துளை

கிணறுகளிலிருந்து மின் மோட்டார் மூலம் 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு, சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது அனைத்து பகுதிகளுக்கு தினந்தோறும் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருவதால், குடிநீர் வினியோக பணிகளுக்காக கீழ்காணும் பொருட்கள் தேவைப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | 3'' Sluice valve | 11 எண்ணம் |
| 2 | 4'' Sluice valve | 10 எண்ணம் |
| 3 | 4'' Air valve | 4 எண்ணம் |
| 4 | 5'' Air valve | 3 எண்ணம் |
| 5 | 5'' Sluice valve | 3 எண்ணம் |
| 6 | 6'' Sluice valve | 8 எண்ணம் |
| 7 | 10 H.P Subemersible pumpset | 5 எண்ணம் |
| 8 | panel board | 5 எண்ணம் |
| 8 | 4 Sq.m cable wire | 600 மீட்டர் |
| 10 | 2'' Gate valve | 10 எண்ணம் |

எனவே குடிநீர் வினியோக பராமரிப்பு பணிகளுக்கு தேவையான மேற்காணும் பொருட்களை கொள்முதல் செய்வதற்கும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.9,80,000/-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.545/2022/இ2

**தீர்மானம் எண்**.28 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.8

இந்நகராட்சிக்குட்பட்ட நடுகள்ளியடைப்பு சாலையில் 15th CFC Untied Grant : 2021-22-ன் கீழ், வடிகால் ஓடை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சாலையில் மீதமுள்ள மின்கம்பம் எண்.12 முதல் சிறுபாலம் வரை வடிகால் ஓடை பழுதடைந்துள்ளதை சரி செய்யப்படாமல் உள்ளது. எனவே பொது நலன் கருதி, பழுதடைந்த நிலையில் உள்ள வடிகால் ஓடையினை சரி செயவதற்கும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.556/2022/இ1

**தீர்மானம் எண்**.29 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் பயன்பாட்டில் உள்ள Shredding machine, Pulveriser, 1 ½ HP Submercible Motor மற்றும் மின் எடை இயந்திரம் ஆகியவற்றில் பழுது ஏற்பட்டுள்ளதால், கழிவுகளை தரம் பிரித்து அரைத்தல் மற்றும் அளவீடு செய்தல் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசர அவசியம் கருதி, மேற்படி இனங்களில் பழுது

நீக்கப்பணிகளை ரூ.50,000/- மதிப்பீட்டில், நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.547/2022/இ1

**தீர்மானம் எண்.**30 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.10

இந்நகராட்சிக்குட்பட்ட சன்னதி தெருவில் கோமதி டவுண் ஹால் அருகில் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ள சாலையில், சீரமைப்பு பணிகளை ரூ.2,10,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.2684 நாள் 21.01.2022-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில், மேற்படி பணிக்கு 08.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.C.தேவராஜ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2 | திரு.C.சந்திரசேகர் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.17% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.C.தேவராஜ் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.87-1/2021/இ1

**தீர்மானம் எண்.**31 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.11

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 V 3530-ல் திடீரென்று ஹீட்டர் பிளக் (Heater Plug) இயங்காத காரணத்தால், அவசர அவசியம் கருதி, மேற்படி பழுதினை சரி செய்த வகையில், அதற்கான செலவினம் ரூ.1260/- திரு.N.செல்வகுமார் ஓட்டுநரால் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.5030/2010/இ1

**தீர்மானம் எண்.**32 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.12

இந்நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாகம் கடை எண்.16.ஐ திரு.செந்தில் குமார் என்பவர் 2007-2008 ஆம் ஆண்டு முதல் 2017-2018 வரை நடத்தி வந்தார். பின்னர் மேற்படி கடையானது மறு ஏலம் விடப்பட்டு திரு.ஜாண் நிக்ஸன் என்பவர் கடை நடத்தி வருகிறார். எனவே காலங்கடந்த முன்வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் எண்.17, வரிசை எண்.16 -ல் திரு.செந்தில் குமார் பெயரில் தொகை ரூ.7930/- உள்ளது. மேற்படி நபருக்கு (செந்தில் குமார்) தொகை ரூ.7930/-ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.358/2022/அ1

**தீர்மானம் எண்**.33 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.13

இந்நகராட்சி சேவை வரி அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகைக்கு SBI, Town Branch, குளச்சல் வங்கியில் உள்ள கணக்கு எண்.67283875416-ஐ சேவைவரி அலவலகம் மூலம் கணக்கு எண்ணிற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்படி சேவை வரி அலுவலகம் பிறப்பித்த உத்தரவிற்காக இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கறிஞர் திரு.ஆதிமூல பாண்டியன் என்பவர் மூலம் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு எண்.WP(MD) No.6371 of 2022 மற்றும் WMP(MD)Nos. 4697 & 4968 of 2022-ன் படி சேவை வரி அலுவலகம் பிறப்பித்த உத்தரவிற்கு தடை ஆணை பெறப்பட்ட வகையில் வழக்கறிஞர் திரு.ஆதிமூல பாண்டியன் என்பவருக்கு ரூ.30,000/- கேட்டு கேட்பு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாருக்கு (திரு.ஆதிமூல பாண்டியன்) வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.2524/2012/பி1

**தீர்மானம் எண்**.34 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.14

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மூலம் தினசரி 1.5 மெ.டன் அளவிற்கு விற்பனை மற்றும் மறு சுழற்சி செய்ய இயலாத Dry waste கழிவுகள் கலவை உரக்கிடங்கிற்கு வரப்பெறுகிறது. மறு சுழற்சி செய்ய இயலாத Non Saleable plastics திடக்கழிவுகள் 09.02.2021 ஒப்பந்தப்படி Cement factory களுக்கு லாரிகள் மூலம் ஏற்றி அனுப்பப்பட்டு வருகிறது. எனவே 2022-2023 ஆம் ஆண்டிற்க JCB வாகனம் மூலம் இந்நகராட்சி குப்பை கிடங்கில் உள்ள பணிகள் மேற்கொள்ள 25.04.2022-ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | பெயர் மற்றும் விலாசம் | ஒரு மணி நேரம் JCB வாடகை GST உட்பட தொகை ரூ. |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.லெஸ்லின் பாபு<br>த/பெ.சிலுவை ராஜன், ரீத்தாபுரம் | 820/- |
| 2 | திரு.பி.கிளைமன்ட் ராஜ்<br>த/பெ.இருதயதாசன், இலந்தவிளை, மேக்கோடு. | 860/- |
| 3 | திரு.எம்.சுபிட்சன்,<br>த/பெ.மரிய சூசை, பத்தறை, ரீத்தாபுரம். | 900/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.(1)-ல் கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், திரு.எஸ்.லெஸ்லின் பாபு, ரீத்தாபுரம் நிறுவனத்திற்கு JCB மூலம் உரக்கிடங்கில் உள்ள Non Saleable Plastic குப்பைகளை அகற்ற உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.480/2022/எச்1

**தீர்மானம் எண்**.35 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.15

குளச்சல் நகராட்சியில் 2022-2023 ஆம் ஆண்டிற்கு

1. புதிய குடிநீர் குழாய் இணைப்பு
2. பழுது பார்ப்பு கட்டணம்
3. துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கட்டணம்
4. பெயர் மாற்றத்திற்கான கட்டணம் ஆகியவற்றிற்கு கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. புதிய குடிநீர் குழாய் இணைப்பு

(A) குடியிருப்பு பயன்பாடு

| அளவு | சிமெண்ட் தளம் | தார் தளம் | மண் தளம் |
|---|---|---|---|
| 0-15m | 18463 | 18112 | 10845 |
| 0-30m | 29868 | 29169 | 14535 |
| 0-45m | 42150 | 41101 | 19150 |
| 0-75m | 65135 | 62369 | 26805 |
| 0-90m | 76801 | 74702 | 30802 |

B) வணிக பயன்பாடு

| அளவு | சிமெண்ட் தளம் | தார் தளம் | மண் தளம் |
|---|---|---|---|
| 0-15m | 28463 | 28112 | 20845 |
| 0-30m | 39868 | 39169 | 24535 |
| 0-45m | 52150 | 51101 | 29150 |
| 0-75m | 75136 | 72369 | 36805 |
| 0-90m | 86801 | 84702 | 40802 |

C) தொழிற்சாலை பயன்பாடு

| அளவு | சிமெண்ட் தளம் | தார் தளம் | மண் தளம் |
|---|---|---|---|
| 0-15m | 23463 | 23112 | 15845 |
| 0-30m | 34868 | 34169 | 19535 |

| | | | |
|---|---|---|---|
| 0-45m | 47150 | 46101 | 24150 |
| 0-75m | 70136 | 67369 | 31805 |
| 0-90m | 81801 | 79702 | 35802 |

2) பழுதுபார்ப்பு கட்டணம்

| அளவு | தளம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | மண் தளம் | 1000/- |
| 2 | தார் தளம் | 1550/- |
| 3 | சிமெண்ட் தளம் | 1600/- |

3) துண்டிப்பு மற்றும் மறு இணைப்பு கட்டணம்

| | |
|---|---|
| துண்டிப்பு கட்டணம் | ரூ.750/- |
| மறு இணைப்பு கட்டணம் | ரூ.750/- |

4) பெயர் மாற்ற கட்டணம்

பெயர் மாற்றத்திற்கான கட்டணம் ரூ.400/-

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.256/2020/இ2

தீர்மானம் எண்.36 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.16

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்வதற்காக பர்னட்டிவிளை, பாலத்தன்கரை, சி.எம்.சி காலனி மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 23 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின் மோட்டார்கள் மூலம் 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு, நகராட்சி பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீரேற்றும் நிலையத்தில், மின் மோட்டார்கள் நாள் ஒன்றிற்கு 20 மணி நேரம் இயக்கப்பட்டு வருகிறது. இதனால்மின் மோட்டார்களில் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. குடிநீர் வினியோகத்திற்காக பதிக்கப்பட்டுள்ள பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் பல ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ளதால், அடிக்கடி உடைவுகள் ஏற்பட்டு வருகிறது. மேலும் நகராட்சி பகுதிகளில் ஏற்ற, இறக்கங்கள் அதிகம் உள்ளதால், ஒவ்வொரு தெருக்களுக்கும் தனித்தனியாக வால்வுகளை இயக்கி, தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வரும் நிலையில், வால்வுகளிலும் அதிக அளவு பழுதுகள் ஏற்பட்டு வருகிறது. குளச்சல் கடற்கரை பகுதியாக உள்ளதால், தண்ணீரின் தன்மை காரணமாக மின்மோட்டார்கள் மற்றும் பம்புகளில் பழுது ஏற்படுவதுடன், கடல் காற்றினால் E.B line, Fuse carrier, Panel board, Main Switch ஆகியவற்றில் பெரும் அளவில் பழுதுகள் ஏற்பட்டு வருகிறது.

எனவே மேற்காணும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து, அனைத்து பகுதிகளுக்கும் சீரான முறையில், தினந்தோறும் குடிநீர் வினியோகம் செய்வதற்கு ஏதுவாக 2022-2023 ஆம் ஆண்டு குடிநீர் வினியோக பராமரிப்பு பணிகளை ரூ.9,50,000/- மதிப்பீட்டில், நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.546/2022/இ2

தீர்மானம் எண்.37 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.17

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2700/2021/WB நாள் 02.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.1406/2017/ஆ2 நாள் 08.03.2022-ல், குளச்சல் நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றம் செய்திட Autocad மூலம் தனித்தனியாக Town Map-ல் Mark செய்து Consultant- ஆல் அளிக்கப்பட்ட கள அறிக்கையினை கூர்ந்தாய்வு செய்து தெளிவான வகையில் திட்ட அறிக்கையினை தனி நபர் வாயிலாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் சம்மந்தப்பட்ட அலுவலரிடம் நேரில் சென்று சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரைபடங்களை Autocad மூலம் Rathee Construction, திங்கள் நகர், நிறுவனத்தால் Autocad drawing தயார் செய்து வழங்கப்பட்ட வகைக்கு மேற்படி நிறுவனம் கீழ்கண்டபடி பட்டியல் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

Bill Invoice No.2785, dt 02/03/2022 - Rs.16.720/-

எனவே மேற்படி Autocad drawing மற்றும் print எடுக்கப்பட்ட வகைக்கு மொத்த பட்டியல் தொகை ரூ.16,720/-ஐ Rathee Construction, Thingal Nagar க்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.763/2017/இ2

**தீர்மானம் எண்**.38 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.18

இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கடை எண்.35-ஐ திரு.முகம்மது முசம்பில் என்பவர் ஏப்ரல் 2018 முதல் கடை நடத்தி வந்தார். கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.1,00,000/- கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.1,49,160/- மொத்தம் சேர்த்து ரூ.2,49,160/- செலுத்தியுள்ளார். தற்போது கடையை தன்னால் நடத்த இயலாத காரணத்தினால் திரும்ப ஒப்படைத்துள்ளார். கடைக்கு மாத வாடகை பிப்ரவரி 2022 முதல் ஏப்ரல் 2022 வரைக்கும் ரூ.50604/- நிலுவையாக உள்ளது. எனவே கடைக்கு முன்வைப்புத் தொகை ரூ.2,49,160/-லிருந்து மாத வாடகை நிலுவைத் தொகை ரூ.50604/- போக மீதமுள்ள தொகை ரூ.1,98,556/-ஐ அன்னாருக்கு (திரு.முகம்மது முசம்பில்) வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்**.39 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.19

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.7-ஐ திரு.பைசல் என்பவர் மாத வாடகைக்கு எடுத்துள்ளார். கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.1,00,000/- கூடுதல் முன்வைப்புத் தொகையாக ரூ.60,000/- மொத்தம் சேர்த்து ரூ.1,60,000/-ம் செலுத்தியுள்ளார். மேற்படி கடைக்கு ஏப்ரல் 2021 முதல் மார்ச் 2022 வரைக்கும் ரூ.77880/- நிலுவையாக உள்ளதினை 18.03.2022-ல் முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டுள்ளது. எனவே முன்வைப்புத் தொகை ரூ.1,60,000/-

லிருந்து மாத வாடகை நிலுவைத் தொகை ரூ.77,880/- போக மீதமுள்ள தொகை ரூ.88,120/- ஐ அன்னாருக்கு (பைசல்) வழங்கவும் 01.04.2022 - ல் உரிமம் ரத்து செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.01/2020/அ3

**தீர்மானம் எண்**.40 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.20

இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 24 வார்டுகளுக்கு குடியிருப்பு, வணிகம், தொழிற்சாலை மற்றும் பள்ளிகூட கட்டிடங்களுக்கு 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு அறிவிக்கை தினத்தந்தி நாளிதழில் 14.04.2022-ல் விளம்பரம் செய்த வகையில் ரூ.29,820/-ம் தினகுரல் நாளிதழில் 14.04.2022-ல் விளம்பரம் செய்த வகையில் ரூ.36,000/-ம் மற்றும் Express publications (Madurai) private limited நாளிதளில் 14.04.2022 -ல் விளம்பரம் செய்த வகையில் ரூ.1,22,850/-ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.1249/2018/அ1

**தீர்மானம் எண்**.41 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.21

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை செயல்முறைகள் ந.க.எண் K.Dis No.30726/P3/2017 நாள் 10.01.2018-ன் படி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் (Out sourcing) 45 தினக்கூலி பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 45 தினக்கூலி பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு M/s.Puliyoorsalai Labour contract Co-operative society Ltd., நிறுவனத்திற்கு 01.11.2021-ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனத்திற்கான ஒப்பந்த காலம் 30.04.2022-ல் முடிவடையும் நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடிதம் ந.க.எண்.21287/2021/EA2-ன் படி, வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பணியாளர்களை பணியமர்த்துதல் தொடர்பாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அளவுகோலின் அடிப்படையில், திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான பணியாளர்களை பணிக்கு அமர்த்துவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் முதன்மை அனுமதி கோரி 13.10.2021-ல் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி முதன்மை அனுமதி பெறப்படும் வரையில், M/s.Puliyoorsalai Labour contract Co-operative society Ltd., நிறுவனம் ஏற்கனவே வழங்கியுள்ள விலை நிரக்கில் 45 பணியாளர்களை கொண்டு திடக்கழிவு மேலாண்மை தொடர்பான அனைத்து பணிகளையும் தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஒப்பந்தத்தை 6 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான செலவினம் ரூ.45.00 இலட்சம் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் முதன்மை அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் மேற்படி நிறுவனத்தின் உடனான ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.809/2020/எச்1

**தீர்மானம் எண்.**42 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.22

இந்நகராட்சி 2020-21 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கைகள் (வருவாய் மற்றும் மூலதனநிதி மற்றும் குடிநீர் & வடிகால் நிதி) கணணியில் தயார் செய்து பிரிண்ட் எடுத்து பைண்டிங் செய்த வகையில் ரூ.13,670/-ஐ M/s.அருந்ததி கிருஷ்ணன் கோவில் நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மற்றும் 2020-21 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.60070/- அரசு தலைப்பில் செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.942/2012/எச்1

**தீர்மானம் எண்.**43 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.23

இந்நகராட்சியில் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி தொடர்பான விவரங்கள் Online-ல் பதிவு செய்த வகையில் ரூ.10,000/- M/s.Jacob & Jacob மார்த்தாண்டம் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1219/2015/பி1

**தீர்மானம் எண்.**44 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.24

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறைகள் ந.க.எண்.10327/2022/எம்3 நாள் 17.05.2022-ன் படி, இந்நகராட்சி குடிநீர் நிதியில், நகராட்சி பொறியாளர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு Bolero ஈப்பு வாகனம் ரூ.8,27,742/- இலட்சம் மதிப்பீட்டில், அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட (GEM rate) விலைக்கு மிகாமல், விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.370/2022/இ1

**தீர்மானம் எண்.**45 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.25

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் வசித்து வரும் திரு.P.R.பிரேம்ஜித் கௌதம் என்பவர் கடந்த 15 வருடங்களாக கன்னியாகுமரி மாவட்டத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருவதாகவும், குளச்சல் நகராட்சி சட்ட ஆலோசகராக பணிபுரிய விரும்புவதால், தன்னை குளச்சல் நகராட்சியின் சட்ட ஆலோசகராக பணி நியமனம் செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டுள்ள வழக்கறிஞர் பட்டியலில், குளச்சல் நகராட்சிக்கு சட்ட ஆலோசகராக திரு.எஸ்.முத்து குமரேஷ் (Ms.1398/1993) பத்மநாபபுரம் என்பவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே குளச்சல் நகராட்சிக்கு சட்ட ஆலோசகரை தேர்வு செய்வது தொடர்பான மேல்நடவடிக்கைக்காக மேற்படி விவரங்கள் மன்றத்தின் தகவலுக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** : மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

ந.க.எண்.410/2022/இ1

**தீர்மானம் எண்.46** ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.26

இந்நகராட்சிக்கு 2021-2022 ஆம் ஆண்டுக்கு தணிக்கைக்காக சொத்துவரி, தொழில்வரி, காலிமனைவரி, குடிநீர் கட்டணம் ஆகியவற்றினை Spiral Binding மற்றும் சொத்துவரி பொது சீராய்வுக்கு Master list Binding செய்த வகையில் பட்டியல் எண்.19, நாள் 23.05.2022-ன் படி, ரூ.5300/- கேட்டு தாசன் ஆப்செட், குளச்சல் நிறுவனத்திடமிருந்து கீழ்காணும் விபரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Audit Report Xerox & Spiral 8 Book Binding | 1050/- |
| 2 | Vacant land Tax Revision 23 Book Sprial Binding | 1250/- |
| 3 | Audit Report 14 Book Spiral Binding | 2100/- |
| 4 | Water supply 6 Book Spiral Binding | 900/- |
| | Total | 5300/- |

மேற்காணும் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து தாசன் ஆப்செட், குளச்சல் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4826/2012/அ1

**தீர்மானம் எண்.47** ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.27

இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்காக அனைத்து பிரிவுகளிலும் நிறுவப்பட்டுள்ள பதினான்கு கணணிகள் மற்றும் ஏழு பிரிண்டர்களுக்கு ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும், பழுது நீக்க பட்டியல் தொகையை வழங்குவதிலும் காலதாமதம் ஏற்படுவதால் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து அதற்கான பட்டியல் தொகையினை வழங்குவதற்கு ஏதுவாக 2022-2023 ஆம் ஆண்டிற்கு கணணி மற்றும் பிரிண்டர்களுக்கான உத்தேச செலவினத்தொகை ரூ.1,00,000/-க்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அ..கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.AP/544/2006

**தீர்மானம் எண்.48** ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.28

இந்நகராட்சியில் 1601 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில், தெருவிளக்கு பராமரிப்பு பிரிவில் ஒரு மின்கம்பியாளர் மற்றும் ஒரு மின்கம்பி உதவியாளர் பணியிடங்கள் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டுள்ளதால், தெருவிளக்கு பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு பணியாளர் பற்றாக்குறை ஏற்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (நபக3) அரசாணை நிலை எண்.70 நாள் 05.05.1998-ல் 600 தெருவிளக்குகள் பராமரிப்பிற்கு, ஒரு மின்கம்பியாளர் மற்றும் ஒரு உதவியாளர் என நிர்ணயிக்கப்பட்டுள்ளதை அடிப்படையாக கொண்டு, நகராட்சி பகுதியில் தெருவிளக்கு

பழுதுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்வதற்கு ஏதுவாக, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை எண்.அ1/13710/2020 நாள் 02.07.2021-ல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நாள் ஒன்றிற்கு ரூ.615/- தினக்கூலியில், 3 எண்ணம் பணியாளர்களை ஜூலை 2022 முதல் ஜூன் 2023 வரையிலான ஒரு வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்கும், அதற்கான ஊதிய செலவினம் ரூ.6,75,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.685/2022/இ1

**தீர்மானம் எண்**.49 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.29

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு போதுமான நாற்காலிகள் இல்லாமல் உள்ளதால், அவசர அவசியம் கருதி, 25 எண்ணம் நாற்காலிகள் வாங்குவதற்காக விலைப்புள்ளி கோரப்பட்டதில், 3 எண்ணம் விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. அதன் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.பாபு<br>ஒப்பந்ததாரர் | 1 எண்ணத்திற்கு ரூ.700/- |
| 2. | திரு.எஸ்.சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | 1 எண்ணத்திற்கு ரூ.800/- |
| 3. | திரு.எஸ்.ஜாண்றோஸ்<br>ஒப்பந்ததாரர் | 1 எண்ணத்திற்கு ரூ.750/- |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், திரு.எஸ்.பாபு, ஒப்பந்ததாரர் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்க, நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று, வினியோக உத்தரவு வழங்கியதற்கும், மேற்படி நாற்காலிகள் வாங்குவதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.555/2022/இ1

**தீர்மானம் எண்**.50 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.30

இந்நகராட்சி ஈப்பு (கண்காணிப்பு வாகனம்) TN 75 K 6526-ல் பின்புற சக்கரங்களில் (Backside wheels) பழுது ஏற்பட்டதால், வாகனத்தை இயக்க இயலாத நிலை ஏற்பட்டது. எனவே அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்தை M/s.Akshaya Motor, Marthandam நிறுவனத்திற்கு கொண்டு சென்று, பின்புற சக்கரங்களின் Bearing-ல் ஏற்பட்ட பழுதினை சரி செய்த வகையில் திரு.சி.சுந்தர் ராஜ், ஓட்டுநரால் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.4,500/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.7057-1/2011/இ1

**தீர்மானம் எண்**.51 ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.31

1-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஷீலா ஜெயந்தி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 1-வது வார்டு பூக்குழி, சிங்கன்காவு சாலையில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1-ல் அமைந்துள்ள மின் கம்பம் எண்.8-ல் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு பகுதியில் புதிதாக அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.
4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு கோவில் பக்கம் உள்ள சாலையில், நரிக்கல் பகுதியில் ஒரு பகுதி வரை தார் ரோடு சரிசெய்யப்பட்டுள்ள நிலையில், மறுபுறம் செடி, கொடிகள் நிறைந்த மண் சாலையாக உள்ள இடத்தில் அப்பகுதி மக்கள் பயன்பாட்டிற்காக புதிய தார் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு, பூங்குழி பகுதியில் மின்கம்பம் எண்.5,6,7 ஆகியவற்றில் தெருவிளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
6. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு, பூக்குழி பகுதியில் கதவு எண்.17-169/24, 17-169/18, 17-160/26 ஆகிய வீடுகளின் முன்புறம் உள்ள மண்சாலையினை சிமெண்ட் தளமாக அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
7. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு கோவில் பக்கம் நகராட்சிக்கு சொந்தமான நவீன பூங்கா முட்புதர்கள வளர்ந்து விஷ ஜந்துக்கள் நிறைந்து, அருகிலுள்ள வீடுகளுக்குள் சென்று மக்களை துன்புறுத்துகிறது. எனவே மேற்படி முட்புதர்களை மாற்றி சுத்தம் செய்து பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் அப்பகுதி மக்களின் கோரிக்கையின்படி, அங்கன்வாடி மையம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.52 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.32

2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சி.சுரேஷ் குமார் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 2-வது வார்டில் நாராயண நகர் பகுதியில் உள்ள சிமெண்ட் சாலை பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி சாலையின் நடுவில் மழைநீர் வடிகால் ஒடையுடன் சிமெண்ட் காங்கிரீட் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வெள்ளியாகுளத்தை சுத்தம் செய்து, அதில் ஏற்பட்டுள்ள நீர் கசிவினை சரி செய்வதற்கும், கல்படி அமைப்பதற்கும், பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும், நீர் வள ஆதாரத்தை பெருக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பொதுப்பணித்துறையினை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.53 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.33

4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.க.செல்வகுமாரி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அரசு நடுநிலைப்பள்ளி 1901 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 120 ஆண்டுகள் நிறைவடைந்த மிக பழமையும் பெருமையும் பெற்ற நடுநிலைப்பள்ளி ஆகும். மேற்படி பள்ளியில் 384 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். பள்ளியின் வகுப்பறை கட்டிடங்கள் மிகவும் பழமை வாய்ந்ததால், அதன் ஓட்டு கூரைகள் சிதிலமடைந்து, மழை காலங்களில் ஒழுக்கு ஏற்பட்டு, மாணவர்கள் கல்வி பயில முடியாத அபாய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பள்ளிக்கு நவீன வசதிகளுடன் கூடிய 10 வகுப்பறை கட்டிடங்கள் கட்டிட தமிழக அரசு பள்ளிக்கல்வி துறையை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சி பகுதியில் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளும், தனியார் மெட்ரிக்குலேஷன் பள்ளிகளும் மட்டும் உள்ளன. இதனால் அரசு வழங்கும் கல்வி சலுகைகள் குளச்சல் நகர ஏழை மாணவர்களுக்கு கிடைப்பதில்லை. குறிப்பாக தற்போது தமிழக அரசு அறிவித்துள்ள மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/- கல்வி உதவித் தொகை கிடைப்பதற்கு வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. எனவே புதிய புல எண்.A1-42-ன் படி, 2 ஏக்கர் 10 சென்ட் என்ற மிகப்பெரிய நிலப்பரப்பை கொண்ட 121 வருட பழமையும், பெருமையும் வாய்ந்த குளச்சல் அரசு நடுநிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி தர தமிழக அரசு பள்ளித்துறையை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.54 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.34

5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஆர்.ஆறுமுக ராஜா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை பகுதியில் அமைந்துள்ள ரேஷன் கடையின் இடது பக்கம் பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஓனர் காம்பவுண்ட் (புல்லன்விளை) பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஒத்தைக்கண் பாலத்தில் நரிக்கல் வரை மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட புல்லன்விளை பகுதியில் கதவு எண்.24-55/3 முதல் 24-55/10 வரை சாலை வசதி ஏற்படுத்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.55 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.35

6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஷே.குறைஷா பீவி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலையில் இருந்து வண்ணாத்திவிளை செல்லும் குறுக்குத் தெருவில் குடிநீர் குழாய் பதித்தல் பணி மேற்கொண்ட போது சாலையில் பதிக்கப்பட்டிருந்து வண்ணக்கற்கள் பெயர்ந்து குண்டும், குழியுமாக உள்ளது. எனவே அதனை சரிசெய்திட மன்றம் தீர்மானிக்கலாம்.

2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காமராஜர் சாலையில் பல இடங்களில் ஜல்லிகள் பெயர்ந்து மிக மோசமாக உள்ளது. எனவே மேற்படி சாலையில் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ள (Patch work) மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.56 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.36

10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.வி.கோமளா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் தெரு தெற்கு பகுதியில் கலா ஜெகதீசன் வீட்டின் அருகில் உள்ள குறுக்கு தெருவில் மழை நீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் தெரு தெற்கு பகுதியில் ஜெகன் மோகன் வீட்டின் அருகில் உள்ள குறுக்கு தெருவில் மழை நீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் தெரு தெற்கு பகுதியில் பொன்னுசாமி வீட்டின் அருகில் உள்ள குறுக்கு தெருவில் மழை நீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் தெரு அருள்மிகு அம்பாள் தேவசேனாதிபதி முருகன் கோவில் தெப்பகுளம் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட ரேஷன் கடை கட்டிடத்தில் பராமரப்பு பணிகள் மேற்கொண்டு பகுதி நேர ரேஷன் கடை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.
5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட நெசவாளர் தெருவின் பெயரை குறிக்கும் வகையில் வழிகாட்டு பலகை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.57 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.37

11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.அ.நசீர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட காவடிவிளை பகுதியில் கதவு எண்.21-102 முதல் 21-108 வரை பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை பகுதியில் கதவு எண்.20-38 முதல் 20-58 வரை மழை நீர் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை பகுதியில் கதவு எண்.20-58 முதல் 20-74 (நாகூர் கண் வீடு) வரை மழை நீர் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்
4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட செட்டிவிளை பகுதியில் கதவு எண்.20-64 முதல் 20-89 வரை மழை நீர் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்
5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட எம்.ஜி.ஆர் தெரு முதல் பிரதான சாலை வரை பேவர் பிளாக் சாலை அமைக்கவும், வடிகால் ஓடையில் சிமெண்ட் மேல்மூடியை மாற்றி விட்டு இரும்பு அளி மேல் மூடி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்

**தீர்மானம் எண்**.58 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.38

12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ச.சஜீலா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தும்பக்காடு முதல் பர்னட்டிவிளை வரை உள்ள மழைநீர் வடிகால் ஒடையில் மழை நீர் வெளியேறாமல் தேங்கி நிற்பதால், நீர் கசிவு ஏற்பட்டு குடிநீருடன் கலக்கிறது. எனவே மழைநீர் வடிகால் ஓடையை முழுவதுமாக சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை சாலையில் பதிக்கப்பட்டுள்ள வண்ணக்கற்கள் மிக மோசமாக சேதமடைந்துள்ளதை மாற்றி அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தும்பக்காடு பகுதியில் குடிநீர் குழாயானது சாலையின் மேற்பரப்பில் செல்வதால், பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் கிடைக்காமல் அவதி அடைந்து வருகிறார்கள். எனவே மேற்படி குடிநீர் குழாயினை சரி செய்வதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.
4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை முதல் சேவா பாரதி கட்டிடம் முடியவுள்ள சிமெண்ட் சாலையை முழுவதுமாக அகற்றி விட்டு, மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய தார் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.59 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.39

15-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.M.A.ரஹீம் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தோழமை காலனியில் நகராட்சிக்கு சொந்தமான இடம் ஒரு தனி மனிதர் ஆக்கிரமிப்பில் உள்ளது. அந்த இடத்தை ஆக்கிரமிப்பில் அகற்றி, நகராட்சி கட்டுப்பாட்டில் கொண்டு வந்து, அந்த பகுதியில் குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் ஒரு குழந்தைகள் பூங்கா அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சீம்பிளிவிளை காலனி தொடங்கி குழந்தை ஏசு காலனி தொடக்கம் வரை குடிநீர் குழாய்கள் இல்லை. மேற்படி பகுதிகளில் தற்போது நிறைய குடியிருப்பு வீடுகள் வந்துள்ளது. எனவே இந்த பகுதியில் புதிதாக குடிநீர் குழாய் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குழந்தை யேசு காலனி, வான்மலர் காலனி, தோழமை காலனி ஆகிய பகுதிகளுக்கு சீரான முறையில் குடிநீர் வரவில்லை என அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளார்கள். மேற்படி பகுதிகளில் 16 ஆண்டுகளுக்கு முன் 2’’ குடிநீர் குழாய் பதிக்கப்பட்டுள்ளது. தற்போது அனைத்து வீடுகளிலும் குடிநீர் இணைப்பு உள்ளதால், மேற்படி 2” குடிநீர் குழாயை மாற்றி பெரிய அளவு கொண்ட குடிநீர் குழாய் அமைத்து, அப்பகுதி மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.
4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 15- வது வார்டில் நான்கு மண் சாலைகள் கொண்ட தெருக்கள் உள்ளது. மேற்படி மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்ற மன்றம் தீர்மானிக்கலாம்.
5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குழந்தை யேசு காலனியில் கதவு எண்.4/629 முதல் 4/658 வரை உள்ள மழை நீர் வடிகால் ஓடையில் மழை காலங்களில் தண்ணீர்

வெளியேறாமல் அருகிலுள்ள வீடுகளில் புகுந்து வருவதால், பொது மக்களுக்கு சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி மழை நீர் வடிகால் ஓடையை சரி செய்வதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

6. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 15-வது வார்டில் நான்கு தெருக்களில் புதிதாக 10 எண்ணம் தெருவிளக்கு அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.60 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.40

16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சு.அ.சுஜித்ரா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16-ல் ஆசாரிமார் தெரு அங்கன்வாடி அருகில் உள்ள மண் சாலையினை சிமெண்ட் சாலையாக மாற்றி அமைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சன்னதி தெருவில் சென்ட்ரல் ஹோட்டல் பின்புறம் ஒரு பகுதியில் சாலை போடப்பட்டுள்ளது. அதன் மறுபுறம் சாலை குண்டும் குழியுமாக உள்ளதால், அதில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தும்பக்காடு கட்டையன்விளை பகுதியில் ஒரு பகுதியில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. மீதமுள்ள கண்ணன்விளை வரையிலான பகுதியில் சாலை பழுதடைந்துள்ளதால், அதில் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.61 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.41

17-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.A.அன்வர் சாதத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் பகுதியில் கதவு எண்.4-122/1 முதல் 4-131/1 முடிய உள்ள வீடுகள் இருக்கும் பகுதியில் மழைநீர் வடிகால் ஓடை முழுவதுமாக மண் நிறைந்து, தண்ணீர் செல்ல முடியாமல் பழுதடைந்துள்ளது. மேலும் மேற்படி பகுதியில் பல இடங்களில் பதிக்கப்பட்ட பேவர் பிளாக்குகள் சேதமடைந்துள்ளது. எனவே மழைநீர் வடிகால் ஓடையினை சரி செய்வதற்கும் மற்றும் பழுதடைந்துள்ள பேவர் பிளாக்குகளை மறு சீரமைப்பதற்கும் மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் மலிக்காண்கிணறு முன்பகுதி தெருவில் கதவு எண்.4-148/3 முதல் 4-148/5 முடிய உள்ள குடியிருப்பு பகுதிகளில் புதிதாக மழைநீர் வடிகால் ஓடை மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் மலிக்காண்கிணறு முன்பகுதி 3-ம் சந்தில் ஒரு பகுதி வரை பேவர் பிளாக் பதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதியிலும் மழை நீர் வடிகால் ஓடை அமைத்து பேவர் பிளாக் பதிக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் மலிக்காண்கிணறு முன்பகுதியில் 4-வது சந்து கதவு எண். 4-80/1 முதல் 4-84/1 முடிய உள்ள தெருவில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் சிமெண்ட் காங்கிரீட் சாலை ஆகியவை பழுதடைந்து, மக்களுக்கு மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே மேற்படி வடிகால் ஓடை மற்றும்

சிமெண்ட் காங்கிரீட் சாலையினை நல்ல முறையில் செப்பனிட மன்றம் தீர்மானிக்கலாம்.

5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் மலிக்காண்கிணறு முன்பகுதி 5-ம் சந்தில் கதவு எண். 4-64/1 முதல் 4-64/9 முடிய சுமார் 15 வீடுகள் உள்ள தெரு உள்ளது. மேற்படி தெருவில் இதுநாள் வரை சாலை மற்றும் மழைநீர் ஓடை அமைக்கப்படவில்லை. இது இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் புதிதாக மழைநீர் ஓடை அமைத்து சிமெண்ட் காங்கிரீட் அல்லது பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
6. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட தகரத்தட்டு கோவில் முன்பகுதியில் உள்ள தெருவில் கதவு எண். 4-77/8 முதல் 4-178/1 வரை உள்ள பகுதியில் புதிய மழை நீர் வடிகால் ஓடை அமைத்து சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
7. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட செட்டியத்தெருவில் (பழைய ராபின் மருத்துவமனை முன்புறம்) ஒரு பகுதி வரை பேவர் பிளாக் போடப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதியில் கதவு எண். 5-39A முதல் 5-43 வரை பேவர் பிளாக் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
8. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளி ரோடு எஸ்.பி.எம் திருமண மண்டபம் முன்புறம் உள்ள ஆண்டிப்பிள்ளைத் தெருவில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட காங்கிரீட் சாலை மிக மோசமாக பழுதடைந்துள்ளது. மேற்படி சாலையினை செப்பனிட்டும், மழை நீர் வடிகால் ஓடையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கும் மன்றம் தீர்மானிக்கலாம்.
9. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் ஓடை மிக குறுகலாக உள்ள காரணத்தினால், அண்ணாசிலை அருகில், பர்னட்டிவிளை, சீம்பிளிவிளை, செட்டியத்தெரு, மேலத்தெரு, கீழத்தெரு ஆகிய அனைத்து பகுதிகளிலிருந்தும் வரும் மழை நீர் ஆசாத் நகர், பள்ளி முக்கு ஆகிய பகுதிகளில் குளம் போல் தேங்குகிறது. இது மேற்படி பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாக உள்ளது. இது தொடர்பாக பல கட்டமாக மக்கள் போராட்டம், சாலை மறியல் ஆகியவை செய்த பின்பும் அதே நிலையே தொடர்கிறது. சென்ற வருடம் மழை காலத்தில் மேற்படி பகுதியினை அதிகாரிகள் பார்வையிட்டு, அதனை சரிசெய்வதாக வாக்குறுதி அளித்து சென்றார்கள். மேலும் இது தொடர்பாக ஏற்கனவே மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே அடுத்து வரும் மழைகாலத்திற்கு முன்பு சரியான திட்டமிடலோடு ஆசாத் நகர் பகுதியிலுள்ள மழை நீர் வடிகால் ஓடையை விரிவுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, மக்களின் இன்னலை போக்கிட மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.62 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.42

18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S.ஷீனத் பாத்திமா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பி.எஸ்.புரத்தில் 8 வீடுகளை உள்ளடக்கிய தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்து, புதிதாக 2 தெருவிளக்குகள் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பி.எஸ்.புரத்தில் மின்கம்பம் பழுதடைந்து சாய்ந்து விழும் நிலையில் உள்ளதை உடனடியாக மாற்றியமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
3. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை (பந்தவிளை) பகுதியிலுள்ள புதிய தெருவில் பேவர் பிளாக் அமைக்கவும், இலப்பவிளை 2-வது தெருவில் ஏழு

வீடுகளை உள்ளடக்கிய தெருவில் பேவர் பிளாக் அமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

4. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை பகுதியில் 10 வீடுகளை உள்ளடக்கிய தெருவில் மழைநீர் வடிகால் ஓடையுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
5. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பள்ளி ரோட்டில் (Transformer அருகில்) புதிய தெரு விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
6. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட முகைதீன் பள்ளி தெருவில் பி.எஸ்.புரம் வழியாக சென்று கொண்டிருக்கும் மழை நீர் வடிகால் ஓடையில் ஆங்காங்கே அடைப்புகள் ஏற்பட்டு, துர்நாற்றம் வீசுகிறது. எனவே உடனடியாக வடிகால் ஓடையை தூர்வாரி சரி செய்யவும், சீரான முறையில் மழை நீர் செல்வதற்கு ஏதுவாக சிமெண்ட் மேல்மூடிகளை மாற்றி விட்டு, இரும்பு அளி மேல்மூடி அமைக்கவும் மன்றம் தீர்மானிக்கலாம்.
7. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை (பந்தவிளை) பி.எஸ்.புரம் முகைதீன் பள்ளி ஆகிய தெருக்களில் பதிக்கப்பட்டுள்ள பேவர் பிளாக்குகள் குண்டும், குழியுமாக உள்ளது. இதனால் அவ்வழியே செல்லும் வாகனங்களுக்கும், பாதசாரிகளுக்கும் இடையூறு ஏற்பட்டு வருகிறது. எனவே மேற்படி பகுதியில் பேவர் பிளாக்குகளை மாற்றியமைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.63 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

## பொருள் எண்.43

22-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சி.ஜாண்சன் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 20-வது வார்டில் துறைமுகத்தெரு எண்.1, பழைய பள்ளிக்கூடம் பின் பகுதியில் உள்ள தெருக்களின் நடுவில் செல்லும் மழைநீர் வடிகால் ஓடையில், அதனை சுற்றியுள்ள வண்ணக்கற்கள் பெயர்ந்து, பொது மக்கள் நடப்பதற்கு இடையூறாகவும், சில இடங்களில் வடிகால் ஓடைகளில் மேல்மூடி உடைந்து சிறு குழந்தைகளுக்கு பாதுகாப்பில்லாமல் உள்ளதால், அதனை உடனடியாக சரி செய்வதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.
2. குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 22-வது வார்டில் பல்வேறு இடங்களில் மழைநீர் வடிகால் ஓடைகளில் அடைப்பு ஏற்பட்டு, கழிவு நீரானது தெருக்களில் தேங்கி நிற்பதால், பொது மக்கள் நடந்து செல்ல முடியாமலும், இதனால் கொசுக்கள் பல்கி பெருவதால், மக்கள் பல்வேறு இன்னல்களுக்கும் ஆளாகி வருகின்றனர். எனவே மேற்படி பகுதிகளில் மழை நீர் வடிகால் ஓடைகளை தூர் வாரி சுத்தம் செய்து, பழுதடைந்துள்ள மேல்மூடிகளை மாற்றியமைப்பதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்**.64 தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.